புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது

இந்துசாதனம்.

வோசிஇல (1889) இவ்வருஷம் உடை ஆரம்பமானது.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வினைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்:	ஞு 1-க்கு	ரூ. 5-60
வெளியூர், இந்தியா:	,,	ரூ. 9-40
தொடுவாய்ப்பகுதி:	,,	ரூ. 9-40
தனிப்பிரதி:		சதம் 6

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

முதன்முறைக்கு:—ஒருகலம்		ரூ. 9-40
,,	அரைக்கலம்	ரூ. 5-00
,,	காற்கலம்	ரூ. 3-15
,,	ஒரு அங்குலம்	சதம் 65

அடுத்த முறைகட்கு ஷை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினுலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௫. } யாழ்ப்பாணம்:—இரத்தாட்சிஷு ஆனிமீ ௬௩ (1924 ஜூன் 19) வியாழக்கிழமை. { இலக்கம்—௧௬.

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ளீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர்நந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேது
மதம்பூத்தவினாயகன்றுள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

புத்தக விளம்பரம்.

தெல்லிப்பழை பிரமஸ்ரீ வித்துவான் சிவானந்தையரால், இயற்றிய புத்தகங்கள் என்னிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. தருக்கசங்கிரகம், நியாயபோதினி, பதிகருத்தியம், அன்னம்பட்டீயம், நீலகண்டீயம், சேர்ந்த கட்டுவிலை ரூபா 2 00
2. நம்பி அகப்பொருளுரை ரூபா 1 00
3. இரகுவமிசம் மூலமும் உரையும் முற்பாகம் ரூபா 1 சதம் 50
4. சன்னூலி விலை அணு 1
5. தசகாரியம் அணு 5

க. செல்லம்ஐயர்,
சிவன்கோவில் வடக்குத்தெரு,
வண்ணுர்பண்ணை.

சண்முகானந்த புத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம். (H. 26.)

மகாவிரிய தங்க பஸ்பம்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

25—8—23ல் சென்னையில் நடந்த தமிழ் வைத்திய கான்பரன்ஸ் அண்டு மருந்து கண்காக்ஷியில் இவர் மருந்துகள் பஸ்டினால் (முதல் பரிசு) தேவ ஔஷதங்களென [illegible] பிகேடும், பெற்றவர்.

வீரிய வீர்த்தியில் மன்மதனுக் கோப்பாவர்.

இதை 1, ½ மண்டலம் சாப்பிட சகலவியாதியும் நீங்கி அபார வீரவீர்த்தியும், பசியும், ரத்தவீர்த்தியும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுக்கும் மேலானது. ஒரு முறைபரீக்ஷித்தால் உள்ளாளுன் மறவாதது. இது பிரபுக்களுக்கானது. இதன் அபார சக்தி உபயோகித்தவர்களுக்கே விளங்கும். இது வெகு சீக்கிரத்தில் வீரியத்தையும் பலத்தையும் கொடுத்து இழந்த ஆண்மைத்தனம் முழுவதும் திரும்ப உண்டாக்குகிறது. வெள்ளை, வெட்டை, பவுந்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், சுபக்கட்டு, குணமம், கருமேகம், சூலை முதலிய சகல சர்ம வியாதிகளும் நீங்கும். பத்தியமில்லை.

1-மண்டலம் 48-நாள் பஸ்பம் ரூபா 20, அரைமண்டலம் 24-நாள் பஸ்பம் ரூபா 10.

குருநாக பஸ்பம்-மூலத்திற்கு.

ஆப்ரேஷன் அவசியமில்லை. மூளை தானே கரையும். சீழ்மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4—0—0.

குருதாளக பஸ்பம்-இருமலுக்கு.

காசம், க்ஷயம், சளி, இளைப்பு; இருமல் கட்டசுவாசம், கோளை, சுபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி 8-வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

கெர்ப்ப எண்ணை.

இது ஸ்திரீகள் சஞ்சீவி என்னலாம். மாதாந்திர வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பலிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சின்பை இவற்றிலுள்ள சகலகெடுதல்களும் நீங்கி கெர்ப்பமுண்டாகும் மிக்க அறுபவமானது. புட்டி ஒன்றுக்கு விலை ரூபா 2.

மாத்திரிக சத்து

இதை அணிந்துகொண்டால் சகலவசியம், நினைத்தகாரியசித்தி, தனலாபம், புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும். செய்வினை, பேய், பிசாசு, குழந்தைகளின் பிணி முதலியன நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2—0—0. 6-சத்து ரூபா 10—0—0.

ரோம சங்காரி ஐந்தே நிமிஷத்தில் ரோமத்தை நீக்கும். எரியாது தோல் கெடாது. புட்டி 1-க்கு அணு 8.

சர்வபடை நிவாரணி

சகலமேகப்படை, ஊரல், பூச்சிகடி, வண்டுகடி, பட்டாமரை இவைகள்ஒரோகாலில் உதிர்க்தவிடம் உடனே அரிப்பு நிற்கும் தோல் கெடாது. புட்டி 1-க்கு விலை அணு 8.

பிரமேக நிவாரணி.

நாட்பட்ட பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர்சுருக்கு, எரிச்சல், குத்தல் உடனே நிற்கும். நிச்சயமாய் 3-வேளையில் தீரும் தவறுது. புட்டி ஒன்றுக்கு விலை ரூபா 2.

வி. பி. சார்ஜு வேறு.

சித்த ஆயுள்வேத டாக்டர்,
சி. மலையப்பசாமிப்பிள்ளை,
(Q. (B) 46) நித்தியானந்த மெடிகல் ஹால், பழனி

பித்தவிர டம்ளர்கள்

இந்திய கைத்தொழிலை ஆதரியுங்கள்!

உயர்ந்த பித்தளைத் தகட்டினுல் செய்யப்பட்டது. அழகான நகாஸ் வேலைகள் செதுக்கப்பட்டதோடு பார் வைக்குப் பழபழப்பாகவிருக்கும்.

நகாஸ் வேலை செய்யாத சாதா டம்ளர்களும் உண்டு.

நகாஸ் டம்ளர் 3கோண்ட செட் 1க்கு ரூபா 1/12.
சாதா டம்ளர் 3 கோண்ட செட் 1க்கு ரூபா 1/9.

கே. எஸ். முத்தையா & கம்பனி,
"ஸில்க் ஹவுஸ்" காசி.
(Y. 29.)

"ஸ்ரான்டேர்ட்"

கொழுக்கியோடுகள்.

(Standard Tiles)

பின்வரும் ஸ்யாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்ரான்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின்றோம்:—

முதலாவது, இந்தஓடுகள்மிகப்பாரங்குறைந்தனவும்.

இரண்டாவது, இவைகள்நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றவது, இந்த வட இலங்கையின் தேச சுவாத்தியத்திற்கு இயைந்தஓடுகள்இவைகளேயாம். இந்த ஓடுகள்உஷ்ணகாலங்களிற்குளிர்ச்சியையும் தேளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச் சென்ற மூன்றவருடகாலமாக நாம் தருவித்து விற்றுவருகின்றோம். இந்த மூன்றவருட காலத்துள் நாங்கள் துச்சரியப்படத்தக்க விதமாக இவை செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்க இது சிறந்ததென்பதற்கு இந்த ஒருஸ்யாயமுமே போதிய சான்றாகும்.

ஓடுகள்யாழ்ப்பாணத்திலும் வல்லுவெட்டித்துறையிலும், பருத்தித்துறையிலும் எங்களிடம் பெறற்பாலன.

S. வீரகத்திப்பிள்ளை.

தந்திவிலாசம்,
"Ruby" வல்லுவெட்டித்துறை
(H. 25.)

தேக்க மரம்.

[illegible] கொம்பனியாரிடமிருந்து புதிகாக வருவிக்கப்பெற்றதிறமான தேக்கமரங்கள். நீழம் 6 அடி தொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம் வரையிலுள்ளன. இவைகள் எம்மிடத்தில் விலைக்கிருக்கின்றன, விலைவிபரத்திற்கு எமக்கெழுதவும்.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானுறு.

தந்திவிலாசம்:—
ரூபி. வல்லுவெட்டித்துறை.
(H. 29.)

திறமானமங்களூர்ஓடுகள்

மெஸ்சேர்ஸ் மோர்க்கன் அன்கோ அல்வாரிஸ் அன்கோ திறமோடுகளும் அரையோடுகள், முகட்டோடுகள், கார்ரோடுகள், பிலியோடுகள், கண்ணுடியோடுகள், சித்திர சகிதமானஓடுகள் தளவரிசைக்கற்கள், பூச்சட்டிகள் திறம் போட்லாந்து சிமெந்து முதலானவைகளும் சகாயமான விலைக்குப் பின்வரும் விலாசத்தாரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கா. வ. சுப்பிரமணியம்,
ஓட்டுக்கம்பெனி,
தேவரீர்குளம்,
(H. 23). யாழ்ப்பாணம்.

கதிர்காம ஆடித் திருவிழா.

வருடாந்த ஆடித் திருவிழா இவ்வருஷம் ஆடிமீ 2உ தொடங்கி ஆடிமீ 28உ முடிவு பெறுமெனபதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. இத்திருவிழாவுக்குப் போகும் யாத்திரிகர்களுக்கு உத்தரவுச்சீட்டு(ரிக்கற்)தேவையில்லை.

3. போதிய சாப்பாட்டுச் சாமான்கள் கதிர்காமத்தில் இருக்குமென்பது அசாத்தியம். யாத்திரிகர்கள் தங்கள் சாப்பாட்டுச் சாமான்களைக் கொண்டுபோவது உத்தமம்.

4. 1924-ம் ஆண்டு வைகாசிமீ 30-ந் தேதியின் "கெசற்" பத்திரிகையில் வெளிப்படுத்தப்பட்ட விதிகளையாத்திரிகர்கள்அனுசரிக்கவேண்டும்.

W. M. Holmes,
மைலாமாகாண அரசாட்சியசண்டருக்காக.
வதுனைக் கச்சேரி,
1924-ம்உ ஆனிமீ 7உ.
(G. 404)

புத்தக விளம்பரம்.

(தபாற்செலவு வேறு).

	ரூ.	சத.
பாரதம் ஆதிபருவவுரை	3	25
ஷை சபாபருவவுரை	2	25
ஷை இரண்டும் ஒரே முறையில்	5	00
தொல்காப்பியம் எழுத்ததிகாரம்-நச்சினுர்க்கினியம்	4	50
ஷை சொல். சேனுவரையம்	4	00
அகப்பொருள் விளக்கவுரை (குமாரசுவாமிப்புலவர்பதிப்பு)	1	75
ஷை சொரனத்தையர் பதிப்பு	1	00
இலக்கியச் சொல்லகராதி	1	75
சித்தியார் சுபக்கம் இருவுரை	5	00
ஷை மு. திருவிளங்கம் பதிப்பு 4-பகுதிகள்	2	10
திருவுந்தியார், திருக்களிற்றுப் படியாருரை	0	50
தத்துவப்பிரகாசவுரை	1	75
திருக்குறள் சரவணப்பெருமாளையருரை	3	75
இரகுவமிசவுரை (முதற்பாகம்)	1	50
தருக்கசங்கிரகம்	2	00
ஜாதகபால்கரன்	3	50
இராமாயணநாடகம்	2	25
இராமாயணம் பாலகாண்டம் அரும்பதவுரை	2	00

விலாசம்:— மானேஜர்,
சோதிடப்பிரகாசயந்திரசாலை,
(Q. 47.) கொக்குவில், யாழ்ப்பாணம்.

பல தலைமுறையாய் பிரபலபிரசித்தியடைந்த
வீ. ஸாமி அய்யங்காருடைய

அரைக்கிரை விரைத் தைலம்

இதன்குணம்:

பித்த மேகநீரானது சிரக்கேறி அதனுல் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினுல் சீழ்வடிதல், காது இரைச்சல், காதுவலி, ஐந்துவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடுங் கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், சொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும். இந்த நோட்டீசில் காணப்படாத கழுத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் அனுகூலப் படுத்தும். மேறகண்ட வியாதியில்லாதவர்கள் தெய்த்துல்லகானம்பண்ணினுல் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் யோக்காய்தேய்த்துல்லகானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்து கொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் அகந்தம் மாறுது. அன்று பகலில்மாத்திரம் தூங்கக் கூடாது. 10 பலன் கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0.

பார்கிங் போஸ்டேஜ் பிரத்தியேகம். வெளிநாடுகளுக்கு வி. பி. இல்லாததால் முன்பணம் அனுப்பவேண்டும்.

வி. எஸ். கோமளத்தம்மாள்,
மானியுபாக்சுரர்,
8, பிராடீஸ் ரஸ்தா, மைலாப்பூர்.
(Y. 26)

ஞானோதய வாசிகசாலை.

இது யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை முத்தகயினுர்கோயில் வடக்கு வீதியில் ச. பஞ்சாட்சரக்குருக்களாகிய என்னுடைய கிருகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதில் 1000 ரூபா வரையிற் பெறுமதியான சைவ, வைஷ்ணவமதங்களுக்குரிய புத்தகங்கள், எவரும், எளிதில் வாசிக்கக் கூடிய ஏற்பாட்டுடன் வைக்கப்பட்டிருக்கின்றன. இதை விருத்திசெய்தற்குத் தமிழகத்தார் யாவரும் தக்க பொருளுபகரிக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ச. பஞ்சாட்சரக்குருக்கள்,
(Mis. 490.) ஆனைக்கோட்டை.

இந்துசாதனம்

வாழ்ப்பாணம்:—இரத்நாட்சிஞ
ஆனி ௴ உ வியாழக்கிழமை.

இனிச்செய்வதென்ன? ௩

நமது தேசத்திலே உண்மையாகப் பஞ்சம் நீங்கி நமது வாலிபர்கள் எல்லாரும் மரியாதையான வேலைஞ் செய்து வாழவேண்டுமானால் இங்குள்ள பொருள் அந்நிய தேசங்கட்குச் செல்லாவகை தடுத்தல் வேண்டும். நெல்லும் மற்றுந் தானியங்களும் கறிக்குரிய வெஞ்சனங்களாகிய சரக்குவகைகளும் எங்கள் நித்திய உபயோகத்திற்கு வேண்டிய சர்க்கரை சீனி கற்கண்டு முதலியனவும் நமது நாட்டிலே நம்மவர்களால் ஆக்கப்படல் வேண்டும். வன்னிப்பகுதியில் நெல் விளைப்பதற்குப் பிரதிகூலமாயிருப்பது காட்டுக் காய்ச்சலாகும். இந்தக் காட்டுக் காய்ச்சல் அங்குச் செல்வோரைப் பிடிக்காவண்ணம் அரசினரே நல்லதண்ணீர் உதவுதல்வேண்டும்; வைத்தியசாலைகளைத் ஸ்தாபித்தல் வேண்டும்; வீடுகள்தோறும் பெண்களாயுள்ளார் நூல்நூற்கும் இராட்டினமும் வஸ்திரம் நெசவு செய்தற்கான கைத்தறியும்வைத்து அவற்றை ஆக்குதல் வேண்டும். கண்ணாடி, சவர்க்காரம், மெழுகுவர்த்தி, நெருப்புப்பெட்டி, கடுதாசி, பேனா, பென்சில், மசி, இன்னும் வித்தியாசாலை மாணவர்களுக்கு வேண்டிய மற்றும் உபகரணங்கள், குடை, முதலிய பொருட்களை நம்மவர்கள் தாமே இங்கேயே செய்துகொள்ளல்வேண்டும். இப்பொருள்களைத் தனித்தனி ஒவ்வொருவருஞ் செய்தல் முடிந்த காரியமன்று. பெருந்தொகை நிதிகொண்ட சங்கங்களைத் தாபித்து அச்சங்கங்களின் ஆதரவிற் பெரிய தொழிற் சாலைகளை ஏற்படுத்தி அத்தொழிற்சாலைகளிலேயே கண்ணாடி முதலிய பொருட்கள் செய்யப்படல்வேண்டும்.

நமது நாட்டிலுள்ளவர்கள் தனித்தனி ஒவ்வொரு தொழிலைச் செய்வார்களேயன்றி ஒரு சங்கமாகச் சேர்ந்து கருமஞ் செய்ய விரும்புகின்றார்களில்லை. பணம் வைத்து வட்டிக்குக் கொடுப்போர் சகோதரர் தகப்பன் பிள்ளை என்ற முறையுடையவர்களானாலும் தனித்தனியே அனுமதி பெற்று ஈடு பிடிப்பவர்களேயன்றி இருவர் சேர்ந்தும் கருமம் பாரார்கள். இதனாலேயே இங்கே பெரும் பணமுட்டு உண்டாகின்றது. யாழ்ப்பாண ஐக்கியலாப நிதிச் சங்கம் போன்ற சங்கங்களில் வரவர்கள் பணமிட்டு வைப்பதேற் பெருந்தொகைப் பணம் வெளிநாட்டிற் செல்லாது இங்கேயே தங்கும். இப்படிப்பட்ட சங்கங்களிலுள்ள நிதியை ஆதாரமாகக்கொண்டு பெருந் தொழிற்சாலைகளை நடாத்திப் பெரும் லாபமடைதல்கூடும். வேலையற்றிருக்கும் நமது வாலிபர் இச்சங்கங்களிற் பலவகையான உத்தியோகங்களைப் பார்த்தல் முடியும்.

நமது நாட்டின்கண் செல்வர்களாயுள்ளார் செய்யும் பெரும் பிழை யாதென்னில், அவர்கள் தங்கள் பணத்தை ஆபரணஞ் செய்வித்தலினும் பெரிய வீடு கட்டுவதிலும் வருவாய் அற்பமான நிலத்திற்கு அதிக பொருள் கொடுத்து வாங்குவதிலும் முடக்கிவைத்தலேயாம்; இப்படிப்பட்ட விஷயங்களிற் பணத்தை இட்டு வைப்பதனால் அந்தப் பணம் விருத்தியின்றி முடங்கிக் கிடக்கின்றது. பலர் காலகதியிற் கடன்காரராகின்றனர். ஆதலாற் செல்வர்கள் இவ்வாறான வீண் விஷயங்களிலும் வருவாய் குறைந்த விஷயங்களிலும் பணத்தை இட்டு முடக்கி வைப்பதை விடுத்து நம்பிக்கையுள்ள நிதிச்சங்கங்களிலும் கமத்தொழில் கைத்தொழில் வியாபாரம் என்னும் இவைகளிலும் பொருளை இட்டு வைத்தல்வேண்டும். கமத்தொழிலும் கைத்தொழிலும் வியாபாரமும் பெருஞ் சங்கங்கள் மூலமாக நடத்தப்படுமேல் இந்த நாட்டிலுள்ள பணம் பெரும்பான்மையும் அந்நிய நாட்டிற்குச் செல்லாது. படித்த வாலிபர் உத்தியோகத்தையும் தொழில் பயின்றோர் பல தொழிலையும் கூலிவேலை செய்வோர் கூலிவேலையையும் இச்சங்கங்களால் நடத்தப்படும் தொழிற்சாலைகளிற் செய்து இனிது வாழமுடியும்.

ஆன்மார்த்தக் கல்வி.

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குந் தக."

என்று திருவள்ளுவநாயனார் அருளியிருப்பதில் "கற்பவை" என்பது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்குவித புருஷார்த்தத்தை உணர்த்தும் என்பதே ஆன்றோர் அபிப்பிராயம்.

ஆன்மார்த்தமான உலகம்வேறு, லௌகீக உலகம் வேறு என்றும் அவைகளுக்குள்ளே ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லை என்றும் சாதாரணசனங்கள் கருதிவிடுகின்றார்கள். முற்காலத்திலே உபாத்தியாயர்கள் இவ்வுலகு முழுமையிலும் இவ்வுலக வாழ்க்கையிலும் சகல பிரபஞ்சங்களிலும் ஈசுவரன் இல்லாத இடம் கிடையாதென்றும், அவர் நினைவுக்கும் உணர்வுக்கும் அகப்படாத விஷயமும் கிடையாதென்றும், நாம் செய்யும் காரியமொவ்வொன்றையும் ஈசுவரனுடைய கைங்கரியமாகப் பாவித்துச் செய்துவருவதினால் பரஸ்பரம் அன்பு விருத்தியாகிச் சகோதரபாவம் பரவிச் சச்சரவுக்கிடமின்றிச் ஜனங்கள் ஒத்துவாழக்கூடுமென்றும் தங்கள் மாணவர்களுக்குக் கற்பித்துவந்தார்கள். அதுவுமன்றித் தங்களுடைய நன் நடத்தையால் மேற்படி கொள்கைகளை அனுஷ்டித்துக் காட்டியும் வந்தார்கள். முற்காலத்தில் பொதுவாக மாணுக்கர்கள் தங்களுக்குக் கல்வி பயிற்றும் உபாத்தியாயர்களது கிருகத்திலேயேயிருந்து அவர்களுடைய மக்கள் போலவே பாவிக்கப்பட்டு வந்தார்கள். அதனாலே உபாத்தியாயர்களுக்கும் மாணவர்களுக்கும் அன்பும் ஆதரவும் அதிகம் ஏற்பட்டுவந்தன.

ஒவ்வொருவனும், மனம், வாக்கு, காயங்களினால் செய்யும் ஒவ்வொரு காரியமும் ஈசுவர காரியம் என்று பாவித்துத் தினந்தோறும் நடந்துகொள்ள வேண்டியது என்னும் கருத்து அமைந்த மந்திரத்தை அந்தணர்களாகிய அக்காலத்து ஆசிரியர்கள் சந்தியாவந்தனத்திற் சேர்த்திருக்கிறார்கள். இதுவுமன்றி மனிதர்களை இகத்திலும் பரத்திலும் முன்னுக்கு வரவொட்டாமல் வாதிக்கும் துர்க்குணங்களான கோபம், ஆசை, மயக்கம் இவைகளைத் தவிர்க்கவேண்டும் என்ற கருத்து அடங்கிய மந்திரத்தையும் மேற்படி சந்தியாவந்தனத்திற் சேர்த்திருக்கிறார்கள். யார் யார் எந்த எந்ததெய்வத்தைத் தியானித்தாலும் எல்லாம் ஒரே ஈசுவரனையே போயடையுமென்று கருத்தடங்கிய மந்திரத்தையும் அச் சந்தியாவந்தனத்திலே சேர்த்துள்ளார்கள். இவ்விதமாக ஆசிரியர்கள் தண்ணளியோடு ஆன்மார்த்த கல்வியையே தங்கள் மாணுக்கர்களுக்கு ஊட்டிவந்தார்கள். அக்காலத்து ஆசிரியர்கள் சமயத்திலும் ஆத்ம தத்துவஞானிகள் மந்திரிகளாயிருந்திருக்கிறார்கள். ஸ்ரீராமருக்கு ரிஷி வசிட்டர் மந்திரி. பொதுவாக இட்சுவாகு வம்சத்திற்குக் குருவாயும் மந்திரியாயும் இருந்தவர். இதனால் இராசாங்க நடவடிக்கைகளிலும் ஆன்மார்த்த உலகுவேறு, லௌகீக உலகம் வேறு என்றவித்தியாசமில்லாமல் நிகழ்ந்து வந்தது.

இக்காலத்தில் ஆலயம் பூஜைக்கிருகம் முதலிய இடங்களில் மட்டும் ஈசுவரன் இருப்பதாகவும் மற்ற இடங்களில் இல்லையென்றும் எண்ணி "அவனன்றி ஓரணுவுமசையாது" என்ற ஆன்றோர் மொழியை மறந்து ஜனங்கள் நடந்துவருவதைக் காண்கின்றோம். அதனால் சனங்களுக்குள் அன்பு குறைந்து துன்பங்கள் உண்டாக ஏதுவாகின்றது.

ஈசுவரன் எங்குமிருக்கிறார் என்ற நினைவுடன், ஒவ்வொரு காரியமும் ஈசுவர காரியம் என்று சனங்கள் செய்துவருவார்களானால் இப்பொழுது நாம் காணும் பரிதாபமான கட்சிகளைக்காண இடமிராது. கட்சிகள் வரவர அதிகமாகிக்கொண்டு வருவதால் மேற்படி கட்சிக்காரர்களின் வழக்கைத்தீர்க்க இராசாங்கத்தில் நியாயஸ்தலங்களும் வரவர விருத்தியாகிக்கொண்டே வருகின்றன. அதனால் வழக்காளிகளும் இராசாங்கத்தாரும் அதிக பொருளைச் செலவழிக்கவும் காரணமாகின்றது. தேசசமாதானத்திற்குக் குறைவு ஏற்படுகின்றது. அதனால் பொலிஸ் முதலிய பாதுகாப்புக்காரர்கள் அதிகச் செலவின்பேரில் நியமிக்கவும் ஏதுவாகின்றது. இவைகளுக்கு மூலகாரணம் யாதென விசாரிக்கப் புகின், ஈசுவரனுடைய ஒரு பிரபஞ்சத்தை இரண்டாகப் பிரித்து அதாவது ஈசுவரவிஷயமான தொன்று மற்றை உலக சம்பந்தமான தொன்று என்று இவ்விதமாய் நம் வாழ்வை இரண்டாகப் பிரித்துவிடுதல்தான். ஆனால் சமய ஸ்தாபகர்கள் எல்லோரும் இவ்விதம் ஒரு உலகை இரண்டாகப் பிரித்து வாழக்கூடாதென்று வற்புறுத்தி உபதேசித்திருக்கிறார்கள். அவர்களது பரம்பரையினரான நாம் வாயினால் அவ்வுபதேசங்களை உச்சரித்து இருதயத்தி லணையாமல் நம் வாழ் நாளைக் கழிக்கின்றோம். ஆகையாற்றான் ஒவ்வொரு தேசமும் நாகரிகமடைந்தாலும் அந் நாகரிகம் வெளிப்படட்டாயிருக்கிறதே தவிர உண்மையில் காட்டு மனிதனுடைய சுபாவ குணத்தை ஒத்திருக்கிறது.

இக்காலத்தில் எங்கள் தேசத்திலே ஆன்மார்த்தத்திற்குரிய சம்மார்க்க கல்வி பிற்றப்பட்டவிடமில்லையென்பது எல்லாரும் அறிந்த விஷயமே. அதனால் இக்காலத்தில் படிப்பு நாற்றத்தை யடைந்து பாடசாலைகளில் பி. ஏ., எம். ஏ. முதலிய பட்டங்கள் பெற்றவர்கள்தாமும் ஒழுக்கம் தவறி நடந்துவருவதைக் காண்கின்றோம். இக்கல்வியினால் புத்தியும் கூர்மையாகிறதே தவிர சன்மார்க்கமும் தெய்வபக்தியும் நிறைந்து வருவதாகக் காணப்படவில்லை. மாணுக்கர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அன்பும் சிநேகமும் பெரும்பாலும் ஏற்படுகிறதில்லை. மேலும் பள்ளிக்கூடத்தைவிட்டு வெளியே வந்தால் உபாத்தியாயர்களுக்கும் மாணவர்களுக்கும் யாதொருசம்பந்தமுமின்றிப் போய்விடுகிறது. உபாதியாயர்களும் மேலதிகாரிகளால் தங்கள் வகுப்புகளுக்கேற்பட்ட பாடங்களின் அட்டவணைப்படி கல்வி பயிற்றிப் பரீட்சையிற் றேறும்படி செய்துவிட்டால் தங்களுக்கும் மாணவர்களுக்கும் உள்ள சம்பந்தம் நிறைவேறிவிட்டதென்று நினைக்கின்றார்கள். பொதுவாகக் கல்வியானது மாணுக்கர்களின் நடத்தையைச் சீர்ப்படுத்துவதற்காக ஏற்பட்டதென்பதைப் பெற்றார் பிள்ளைகள் ஆசிரியர் ஆகிய இவர்களில் எவராவது உணர்வதாகக் காணவில்லை.

உலகம் பலவிதம்.

இலங்கையிலேயுள்ள சிறுவர் சிறுமியருக்குக் கல்வியைப் பூட்டுங் கடமை பூண்டவர்கள் கொழும்பிலுள்ள வித்தியாபகுதியாரேயாதலின் அவர்கள் செயலை யாம் அவதானித்து வருவது ஆவசியகமாகும். வித்தியாபகுதியாரால் பாடசாலைகள்தோறும் பரீட்சிக்கும்படி அனுப்பப்பட்ட வித்தியாதரிசிகள் (சோதனைகாரர்) முன்னாளில் வித்தியாசாலைகள்தோறுஞ்சென்று மாணுக்கர்களைப் பரீட்சித்து அவர்கள் கல்வித் திறமையை அறிந்துவந்தார்கள். பின்னர்ச் சிலகாலமாக அவ்வித்தியாதரிசிகள் மாணுக்கரைச் சோதிப்பதை விடுத்து உபாத்தியாயர்களைப் பரீட்சித்து வந்தார்கள். இப்பொழுது அவர்கள் உபாத்தியாயர்களைச் சோதித்தலை விடுத்து வித்தியாசாலைகளிலுள்ள வரவு செலவுக் கணக்குப் புத்தகம் வாங்கு [illegible] என்னு மிவைகளையும் கிளாக்குமாரையுஞ் சோதிக்கத் தலைப்பட்டிருக்கின்றனர். இன்னுஞ் சிலகாலஞ் செல்ல வித்தியாபகுதியார் மாணுக்கரின் பெற்றாரையே சோதிக்கத் தலைப்படுவரோபோலும்.

* * *

கல்வியின் நோக்கம் என்ன? மாணுக்கன் புத்தகமென்றும், வித்துவான் அறிவு என்றும், போதகர் சன்மார்க்கமென்றும், குரு தொண்டென்றும், ஞானி உண்மை என்றும், சித்திரக்காரன் கட்டழகுஎன்றும், லோகாயதன் இன்பமென்றும், சந்நியாசி மனவடக்கமென்றும், கிறிஸ்தவன் சுயநலமின்மை யென்றும், குடியரசிமானி சுயராச்சியமென்றும், இராசதந்திரி ஒத்துழைப்பென்றும், அரசன் விசுவாசமென்றும், தேசாபிமானி தேசாபிமானமென்றும், நீதிபதி நீதியென்றும், விருத்தன் ஞானமென்றும், குமரன் ஆண்மையென்றும், போர்வீரன் தைரியமென்றும், பத்திரிகாசிரியன் அறுகூலமென்றும், தொழிலாளி சாமர்த்தியமென்றும், தனவான் செல்வமென்றும், கற்பனைக்காரன் கற்பனையென்றும், குழந்தை விளையாட்டென்றும், கன்னிகை காதலென்றும், ஆடவன் தொழிலென்றும், நண்பன் சிநேகமென்றும், உபாத்தியாயன் வரீகரமென்றும், வைத்தியர் ஆரோக்கியமென்றும், சிவசாஸ்திரி வளர்ச்சியென்றும், மனோதத்துவசாஸ்திரி விரிவென்றும், சனசமுதாயி இணக்கமென்றும் கூறுவர். ஆனால் உண்மையான ஆசிரியன் மேற்கூறிய அனைத்தும் இன்னும்பலவுமே கல்வியின் நோக்கங்களாமென்பான்.

* * *

"நான் பலவருடகாலமாய் இந்த நாற்சந்தியில் நின்று அந்த மார்க்கமாய் நடந்து செல்வோர்க்கும் வண்டிகளிற் செல்வோர்க்கும் வெளிச்சத்தைக் கொடுத்துவந்தேன். பெய்த மழை, எறித்த வெயில், தெருவிற் புழுதி, பறவையெச்சம், வெற்றிலையுண்போர்பூசும் எஞ்சிய சுண்ணாம்பு, மூக்குச்சளி முதலியவெல்லாம் என்மேற் பட்டாலும் அவற்றைப் பொறுத்துக்கொண்டு வழிப்போக்கருக்கு வெளிச்சமுதவி நன்மை புரிந்தேன். இற்றைக்கு இரண்டு மூன்று மாசங்களுக்குமுன் யாரோ துஷ்டர் கல்லாலெறிந்து என் மண்டையை உடைத்து நான் செய்துவந்த வெளிச்சம் உதவுதலாகிய நல்ல தொழிலையும் செய்யமுடியாது கெடுத்துவிட்டார்கள். அன்று தொடக்கம் இன்றுவரையில் நான் பயனற்று மரியாதை கெட்டுப் பங்கப்பட்டுத் தெருச் சந்தியிலேயே நிற்கின்றேன். என்னை ஏனென்று கேட்பார் எவருமில்லை. சத்துருவானும் இடைஞ்சல் வந்தவிடத்து அவன் பகைவர் அவனுக்கு உதவிசெய்வர். வழிப்போக்கருக்கு அற்பமாயேனும் நன்மை செய்தநான் இப்படிப் பங்கப்பட்டுச் சந்தியில் நிற்கவும் அவர்கள் என்னைச் சிறிதுங் கவனிக்கவில்லை. அவர்கள் போக்கரனமையினாற் போலும். எம்மைப் போலித்துக் கரத்துவந்த பட்டின பரிபாலன சங்கத்தலைவரும் என்னைக்கவனிக்கவில்லை. என்னுடன் கோபித்துக் கொண்டனர் போலும். நான் செய்யாத குற்றத்திற்கு என்னைக் கோபிப்பது சரியல்லவே. வெளிச்சமில்லாமல் நான் இந்தச் சந்தியில் நின்றால், இராக்காலத்திற் சிலநேரத்தில் மோட்டார் ரதங்கள் என்மீது மோதி என் உடம்பை யொடித்துவிடுமென்று நான் பெரிதும் பயப்படுகின்றேன். பறங்கித்தெருவிற்குச் செல்லும் அண்ணமாரே, பட்டின பரிபாலன சங்கத்தலைவரை நீங்கள் காணநேர்ந்தால் என் நிலைபாரதைத் தயவுசெய்து அவருக்குத் தெரிவியுங்கள், அப்படிச் செய்தால் உங்களுக்குப் பெரும் புண்ணியம் கிடைக்கும்" என்று அஞ்சனந்தாழ்வு நீராவியடித்தெரு நாற்சந்தியில் நிற்கும் பீபத்தம்பம் முறையிட்டு அழுகின்றது.

சமாசாரம்.

மோட்டர் விபத்து:—சென்ற சனிக்கிழமை பிரதிநர் ஸ்ரீநினைத்தரையர்களுடைய மோட்டர் ரதம் மல்லாகம் கோட்டுவீட்டுக்குச் சமீபத்தில் அதி வேகமாக ஓடித் தெருவோரத்தில் நின்ற வண்டிகளையும் மோதி, ஒரு ஆடவனதுக் குழந்தையையும் இடறிச் சென்றது.

தாசியர் நடனம் நிறுத்தப்பட்டது:—நாரந்தனைக் கந்தசுவாமிகோயில் மானேசர் அக்கோயிலின் உற்சவகாலங்களில் தாசியர் நடனத்தை முற்றாக நீக்கிவிடுகின்றாரென்றும், சமயப் பிரசங்கம் நடைபெறுவதற்கான ஒழுங்குகளைச் செய்திருக்கிறாரென்றும் அறிந்து மகிழ்ச்சியடையலானேம்.

உபந்நியாசம்: — சென்ற திங்கட்கிழமை இரவு கரம்பொன் சண்முகநாத வித்தியாசாலை மண்டபத்தில் நீர்வேலியாசன் சிற்சபேசன் அவர்களால் "உருத்திராக்கம்" என்னும் விஷயம் மானந்தை சரித்திர மூலமாகப் பிரசங்ஞ செய்யப்பட்டது. அத்தருணம் மகாதேவ சுவாமிகள் அக்கிராசனராக இருந்து அரிய குறிப்புரை கூறினர்.

மோட்டர்ரதம் படலையையும் கவரையும் இடித்து விழுத்தியது:—சென்ற வெள்ளிக்கிழமை உத்தரவு (license) இல்லாத காரதினாற் செலுத்தப்பட்ட ஒரு மோட்டர்ரதம் செப்பல் ஸ்ரீற்றிலுள்ள ஒரு படலையையும், கவரையும் உதைத்து விழுத்தியது. பக்கத்தில் விளையாடிக்கொண்டிருந்த இரு குழந்தைகள் அருந்தப்பாக விலகிக்கொண்டன.

எமது ஏசன்றர் விபத்திலிருந்து தவறிவிட்டார்:—முத்துக்குளிப்பிவிநித்தம் மறிக்கக்கட்டியில் இப்பொழுது நடைபெறும் வேலைகளைப் பரீசோதிக்கும்பொருட்டுச்சென்றவடமகாண ஏசன்றராகிய மிஸ்டர் L. W. C. சிறுதரவர்கள் அரிப்பாற்றைக் கடக்கும்பொழுது ஆற்றில் விழுந்துவிட்டார். அவருடன் சென்ற மிஸ்டர் தெசநாயகியவர்கள் எமது ஏசன்றரவர்களை மீட்டனர்.

பிரசங்கம்:—கொக்குவில் மேற்குச் சைவப் பிரகாச வித்தியாசாலையிற் சென்ற திங்கட்கிழமை இரவு 7 மணிவலையில் மேற்படி வித்தியாசாலை மானேஜர் ஸ்ரீ த. குமாரசுவாமிப் பிள்ளையவர்களின் அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ் இப்பத்திரிகையின் ஆசிரியராகிய ஸ்ரீ ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளையவர்களால் "சமயசஞ்சீவிநிரக்கல்வி" என்னும் விஷயமாக ஒரு பிரசங்ஞ செய்யப்பட்டது.

மகோற்சவம்:—மண்டைதீவு முகப்புவயற் கந்தசுவாமிகோயிலில் இந்மாசம் 10உ திங்கட்கிழமை துவஜாரோகணமாகி 18உ செவ்வாய்க்கிழமை ரதோற்சவமும், மற்றைநாட் காலை தீர்த்தோற்சவமும், 20உ வியாழக்கிழமை இரவு திருக்கல்யாணமும் நடைபெறும். கவிபுலவராகிய சப்பிரமணியப்பெருமான்மேற் பத்திசெய்யும் அடியார்கள்மேற்காட்டியவுற்சவதினங்களிற் சென்று, பெருமானைத் தரிசித்து வணங்கி, இஷ்ட சித்திகளைப் பெற்று உய்வார்களாக.

நாகர்கோவிலில் முப்பத்தையாயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டது. — குருநாகலிலேயுள்ள அருணாசலம் செட்டியாருடைய கடையில் முப்பத்தையாயிரம் ரூபாவரையிற் கொள்ளையடிக்கப்பட்டது.

மோட்டர்பஸ் ஒடும்பொழுது குதித்து இறந்தான்:—கொழும்பிலே வீரசூரியா என்னுமொருவர் மோட்டர்பஸ் வண்டியில் பிரயாணம் பண்ணும்போது குதித்துப் படிகையமுற்றுக் கொழும்புவலத்தியசாலையில் இறந்துபோனான்,

பொலிஸ்தானத்தில் தூக்கிச்செத்தான்:—களவெடுத்தானெனக் குற்றஞ்சாட்டப்பட்டுப

பலாக்கொடைப் பொலிஸ்தானத்திற் கிறைப் படுத்தப்பட்டிருந்தசார்ஜெலில் என்னுஞ்சிங்களவன் ஒருவன் சென்ற வெள்ளிக்கிழமை இரவு ஆக்கி இறந்துகிடக்கக் காணப்பட்டான்.

பின்னுமோர்கொள்ளை —குருநாக்கலில் சிலகளவர் ஒரு வீட்டினுள்ளே புகுந்து அவ்விருந்த இரு பெண்களையுங்கட்டி, அவர்களைப்பாயினால் மூடி அவர்கள்மேல்நெல்லுமூட்டைகளை அடுக்கி விட்டு 500 ரூபா பெறுமதியான நகைகளையும் பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றனர்.

புகைராதக் காவலர் பாலத்தில் மோதுண்டு இறந்தார்:—இந்த ஜூன்மீ 13உ கலேயண்டியிலிருந்து புறப்பட்ட புகைரதம் புதிய பெரிடேனியாவுக்கும் பெரிடேனியாச் சந்திக்கும் இடையிலுள்ள பாலத்தைக்கடக்கும்பொழுது, அவ்விரதத்தில் உதவிக்காவலனாகவிருந்த பொன்சேகா என்பவர் பாலத்தில் மோதுண்டு படுகாயத்துடன் வைத்தியசாலைக்குக் கொண்டோகப்பட்டு அடுத்தநாள் காலை இறந்தனர்.

ஈஸ்றேன் பாங்கில் 1000 ரூபாவைத் திருடினான்:—இந்த ஜூன்மீ 17உ செவ்வாய்க்கிழமை அகமெட் என்னும் ஒருவர் ஷை பாங்குச் சிறப்பருடைய மேசையின்மேல் ஒரு 1000 ரூபா நோட்டை வைத்திருந்தபொழுது, மதுரையிலிருந்து மூன்றுநாட்களுக்குமுன் கொழும்புக்கு வந்திருந்த கோவிந்தராக என்னும் ஒருவன் தருணம் பார்த்திருந்து திருடிக்கொண்டு வெளியே சென்றான். ஷை கள்வன் உடனே பிடிக்கப்பட்டுக் கொழும்புப் பொலிஸ்கோட்டில் ஒப்புவிக்கப்பெற்றான்.

நம்பி மோசம்போன காதலன் பழிவாங்கினான்:—இரத்தினபுரியிலுள்ள ஒருகிராமவாசிதான் விவாகம் செய்துகொள்ளும்வண்ணம் ஏற்படுத்தப்பட்டபெண் வேறொருவனை விவாகம் செய்வதற்கியைந்து பதிவுசெய்துகொண்டமையை அறிந்தான். அவன் இந்த ஜூன்மீ 15உ அப்பெண்ணிடம் சென்றதனை விவாகம்செய்துகொள்ளும்படி கேட்டான். அவள் அதற்குச் சம்மதியாமையினால் அவளைக்கத்தியினாற்குத்தியபின் ஒரு இரண்டுகுழல் துப்பாக்கியுடன் மரத்தின்மேலேறித் தன்னைப்பிடிக்கவருவோரைச் சுட்டுக் கொல்லுவேனெனப்பயமுறுத்தினான். அதன்பின் கிராமத்தலைவரும் வேறுசிலரும்சென்று பயமுறுத்தியதுடன் கீழேயிறங்கித் தன்னை அதிகாரிகளிடம் ஒப்புக்கொடுத்தான். பெண் உடனே இறந்துவிட்டாள்.

புங்குடுதீவுக் கணேச வித்தியாசாலைப் புதுக்கட்டடத் திறப்புவிழா.

சென்ற வைகாசிமீ 25உ (7-6-24) சனிக்கிழமை உதயத்தில் கணேச வித்தியாசாலைப் புதுக்கட்டடத் திறப்பு விழா சிறப்புற நடந்தேறிற்று. கட்டிடம் மேற்கட்டிகளாலும் மகரதோரணங்களாலும் வெளிப்புறம் பன்னிறக் கொடிகள் வானளகளாகியவற்றாலும் அழகுற அலங்கரிக்கப்பெற்றிருந்தது. வெள்ளிக்கிழமை இரவு 8½மணியளவில் பிரமஸ்ரீ க. சோமசுந்தரக் குருக்களவர்களால்பூர்வக் கிரியைகள் ஆரம்பிக்கப்பெற்றன. காலை 5மணிக்கு ஆசிரியரும் வேறு சிலரும் சாரஸ்வதிதேவியின் படத்தை அழகுற அலங்கரித்து குடை கொடி வாத்தியங்களுடனும் தேவார பஜனையுடனும் பழைய வித்தியாசாலைக் கட்டிடத்திலிருந்து ஊர்வலத்திற்கு ஆரம்பித்துச் சமீபத்திலுள்ள கணேச ஆலயத்திற்குச் சென்று திரும்பும் வழியில் முன்னரே அழைக்கப்பெற்றிருந்த கௌரவ ஸ்ரீ வை. துரைசுவாமி அவர்களும், ஸ்ரீ எஸ். ஆர். இராசரத்தினம் அத்துவக்காத் அவர்களும், தீவுபற்று மணியகாரர் ஸ்ரீ மு. சோமசுந்தரமவர்களும், உயர் திரு சுவாமி உருத்திரகோடீஸ்வரர் அவர்களும் வந்து ஊர்வலத்திற் கலந்துகொண்டனர். விநாயக பஜனை வாத்திய கோஷம் உள்ளூர் வெளியூர்ப் பிரமுக்கள் பலரோடுகூடி இக்கோஷ்டியானது புதிய வித்தியாசாலை வாசலை அணுகியதும் வித்தியாசாலையின் அதிபர் அவர்களை வரவேற்றனர். அதன்மேல் வித்தியாசாலைப் பிரதமாசிரியர் ஸ்ரீ கா. நமசிவாயபிள்ளையவர்களால் "பண்ணினேர் மொழியாள்" என்னும் தேவாரம் ஓதப்படச் சகல வாத்தியகோஷத்துடனும் சிவநாமமுழக்கத்துடனும் சுபமாக திறக்கப்பட கௌரவஸ்ரீ துரைசுவாமி அவர்களின் தலைமையின்கீழ்ப் பிரவேசம் ஆயிற்று. அதன்மேல் சபையோர் ததந்தம் இடங்களில் அமர எஞ்சிய கிரியைகளும் பூர்த்தியாயின. கௌரவஸ்ரீ துரைசுவாமியவர்களால் ஆரம்பமாக ஆறும் ஏழாம் வகுப்புமாணவர்க்கும் சில பாடங்கள் சற்பிக்கப்பெற்றன. பிரம்மஸ்ரீ மா. த. மார்க்கண்டேயக் குருக்களவர்களின் புத்திரன் மீனாட்சிசுந்தரத்துக்கும் சமஸ்கிருதம் தமிழ்ப் பாஷைகளில் வித்தியாரம்பம்செய்யப்பெற்றது பின் சபையோர் 9 மணிக்கு மறுபடியும் கூடிற்று. அத்தருணம் ஸ்ரீ துரைசுவாமியவர்கள் அக்கிராசனராயமர்ந்தனர். முதலில் வித்தியாசாலை மாணவர் கதிரவேலு என்பவரால் அக்கிராசனருக்கு ஓர் உபசாரப்பத்திரம் வாசிக்கப்பெற்றது. பின் அவருக்கென இயற்றப்பெற்ற சோபனம் மாணவ்கிளாற் கூறப்பெற்றது. வித்தியாசாலையின் விர்த்தாந்தமும் 14.ம் வருட ஆண்டனமும் வாசிக்கப்பெற்றபின் அக்கிராசனரவர்கள் தமது ஆரம்பப் பிரசங்கத்தைத் தொடங்கினர். அதில் சைவவித்தியாசாலைகளின் தலையெழுத்தையும் சமயக்கல்வியின் அவசியத்தையும் விளக்கிக்காட்டினர். அதன்பின் ஸ்ரீ எஸ். ஆர். இராசரத்தினம் அத்வக்காத்தவர்கள் "சமயநிலையும் கைவர்தயாமும்" என்னும் விஷயத்தில் உள்ளோர்மனங்களைக் கொள்ளைகொள்ளத்தக்கதோர் விரிந்த பிரசாரணங் கூறினர். சுசமயத்தின் [illegible] காலதற்காலநிலைகளையும் அதன் விசேஷ[illegible]யும் விளக்கி முற்காலத்தே இதற்கு பெ[illegible] சமணசமயங்கள் வைரிகளாயிருந்தனவெ[illegible]றும், இக்காலத்தே கிறிஸ்தசமயம் வை[illegible]யிருக்கிறதென்றும், கிறிஸ்த சமயபாடசாலைகளுக்கு ஒருபோதும் பிள்ளைகளை அனுப்புதல் கூடாதெனறும் சரித்திரபூர்வமாகப் பல ஆதாரங்கொண்டு விளக்கினர். அதன்பின் தீவுப்பற்று மணியகாரன் ஸ்ரீ மு. சோமசுந்தரமவர்கள் ஒரு சமயப்பிள்ளை தன்சமயவிசுவாசத்துக்குமாறுன வேறொரு சமயவித்தியாசாலையிற் கற்பதாலாகுமாபத்தையும் எடுத்துக்கூறி ஒவ்வொருசமயத்தவரும் தத்தஞ்சமய பாடசாலைகளுக்கே பிள்ளைகளை அனுப்புதல் வேண்டுமெனவும் அதுவே எங்கள் தற்கால மகத்துவ தேசாதிபதியவர்களின் விருப்பமுமென வற்புறுத்தினர் அதன்பின் அத்துவக்காத் ஸ்ரீ க. இராசரத்தினமவர்கள் இவ்வித்தியாசாலை தமிழ்ப்பாஷையோடு இங்கிலீஷும் படிப்பிக்கப் பெறும் பாடசாலையாயிருத்தல் வேண்டுமெனவும், அக்கால முறையில் இங்கிலீஷ் வித்தியாசாலைகள் தமிழ்வித்தியாசாலைகளெனவிருத்தலதாகுதெனவும் பொதுவாக வித்தியாசாலைகளெனப் படுவன இங்கிலிஷும் தமிழும் படித்தற்குரியனவாயிருத்தல்வேண்டுமெனவும், பாரதூரமான கிறிமினல் வழக்கேயன்றிக்கோட்டுக்குப்போய் வழக்காடாது ஊர்ப்பெரியோர் மூலம் பிணக்குக்களைத் தீர்த்துக்கொள்வது உலகத்துக்கு அதிகம் நன்மையைத்தருமெனவும் பேசினர். கொத்தாரிஸ் ஸ்ரீ வே. சிவப்பிரகாசமவர்கள் இப்பாரியகட்டிடத்தைக் கட்டி முடித்த அளவில்நோக்கம்நிறைவேறுதென்றும்பிள்ளைகளைப் பெற்றார் ஒழுங்காகப் பாடசாலைக்கனுப்பிக் கற்பித்தல்வேண்டுமென்றும் பிள்ளைகளை அறிவுள்ளவர்களாக்குதலே பெற்றாரின் முக்கிய கடமையெனவும் பேசினர் பின்சபாநாயகரின் குறிப்புரையோடு தேவாரபாராயணஞ்செய்யக் கூட்டம் சமாப்தியாயிற்று. இரவு 6 மணிக்குச் சபை மறுபடியும் உயர்திருவாமி உருத்திரகோடீஸ்வரர் அவர்களின் தலைமையில் கூடியது அச்சயம் மஹாதேவசுவாமிகளால் ஆலயம் என்னும் விஷயம் பிரசங்கிக்கப்பெற்றது. சுவாமிகள் ஆலயத்தின் வகைகளையும் அவற்றுள் வித்தியாலயத்தின் சிறப்பையும் அதன் அவசியத்தையும் விளக்கியகவிரந்த ஓர் பிரசாரணங்கூறினர். பிரம்மஸ்ரீ. த. மார்க்கண்டேயக்குருக்களவர்களும் ஸ்ரீ கா. நமசிவாயபிள்ளை ஆசிரியர்அவர்களும் குறிப்புரை கூறினர். இரண்டாம் நாள் ஞாயிற்றுக்கிழமை இரவு 6 மணிக்குச் சபை மீண்டும் கூடியது. உயர்திரு சுவாமி உருத்திரகோடீஸ்வரர் அவர்கள் வித்தியாபரிபாலனம் என்னும் விஷயத்தில் விரிந்ததோர் பிரசங்கம் செய்தனர். கனம் ஈ. கே. யேசுதாசனவர்களும் கனம் ஜோ. பி. அம்பலவாணரவர்களும் வைத்தியர் ஸ்ரீ சி. கனபதிப்பிள்ளையவர்களும் குறிப்புரை கூறினர். தேவாரபாராயணத்தோடு கூட்டம் சமாப்தியாயிற்று. மூன்றும்நாள் திங்கட்கிழமை இரவு 6 மணிக்கு கொக்குவில் ஸ்ரீத. குமாரசுவாமிப்பிள்ளை அவர்களால் "நந்தனுர்சரித்திரம்" பக்கவாத்திய சகிதமாய் வெகுவிமரிசையாய்க் கதாப்பிரசங்கம் செய்யப்பட்டது. பிள்ளையவர்கள் உள்ளங்கவர்ந்துருகுமாறு 3 மணிநேரம் தமது பிரசங்கத்தை நடாத்தினர். பிரசங்கத்தின் இடையிடையே கல்வியின் அவசியத்தை வற்புறுத்தினர். பிரம்மஸ்ரீ. மா. த. மார்க்கண்டேயக்குருக்களவர்களும், ஸ்ரீ கா. நமசிவாயபிள்ளை ஆசிரியர் அவர்களும் குறிப்புரை கூறினர். ஈற்றில் வித்தியாசாலை அதிபர் ஸ்ரீ வ. பசுபதிப்பிள்ளை அவர்கள் பிரசாரகருக்கும் சபையோருக்கும் அதி கூற தேவாரபாராயணத்தோடு சபை சம்பூரணமாயிற்று வித்தியாசாலை நன்னிலையில் ஓங்கிவளர இறைவன் திருவருளை இறைஞ்சுகின்றனம். கடிதம்.

கடிதம்.

திரிமூர்த்தி விளக்கம்.

(முற்றொடர்)

மேற்கூறிய சடசக்தி சிற்சக்தியாகிய இவ்விரண்டு சக்தியையும் கலப்பதனால் உண்டாகும் இயக்கமே புருஷப்பிரகிருதி (Spirit matter) என்று சொல்லப்படும். இவையிரண்டும் ஒன்று சேருங்கால் பிரகிருதியில் மூன்றுவித நிலைகள் வற்படுகின்றன. அவையாவன: சத்துவம் இராசதம் தாமதம். இம்மூன்று நிலைகளுக்கு ஏற்பவே சிற்சத்தியினும் மூன்றுநிலைகள் உள்ளன. இவ்வுண்மையை விளக்குதற்காகவே இராசதகுணத்தால் பிரமா சிருட்டிக்கார் என்றும், சத்துவ குணத்தால் விஷ்ணு பிரபஞ்சத்தைக் காக்கிறார் என்றும், தாமதகுணத்தால் உருத்திரன் பிரபஞ்சத்தை அழிக்கிறார் என்று புராணங்கள்கூறுகின்றன. இதிலிருந்து நாம்அறிந்து கொள்ளவேண்டிய தத்துவார்த்தம் யாது? புருஷப்பிரகிருதியின் மூன்றுவிதமான நிலைகளே, அதாவது உலகம் உண்டாக்கப்படும்போது அது நிற்கும் நிலையும், காக்கப்பட்டவேளும் போது அது நிற்கும் நிலையும், இனி அழிக்கப்படும்போது அது நிற்கும் நிலையும்—பிரமா, விஷ்ணு, உருத்திரன் என்று உருவகப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதே. உலகிருட்டி என்பது கட்புலனுக்குத் தோன்றாமல் அதிகுக்கும நிலையில் பிரிந்து பிரிந்து நிற்கும் பரமாணுக்கள் ஒன்றுசேர்ந்து கட்புலனுக்குத் தோன்றும்படியான ஸ்தூல ரூபத்தை அடைதலாம். இவ்வணுக்கள் ஒன்றுசேருவதற்கு மிக வேகமான இயக்கம் வேண்டும். ஒரு காரியத்தை விரைவாயும் ஊக்கமாயும் செய்து முடிப்பது இராசத குணத்தின் இயல்பாதலால், சிருஷ்டியும், ஒன்றைக் காப்பாற்றிநிலுவதற்கு அமைதியும், சாந்தமும், இரக்கமும், வேண்டுமாதலால் அக்குணங்களை இயல்பாகக் கொண்ட சத்துவகுணத்தை இரட்சிக்கும் கடவுளான விஷ்ணுவுக்குக் கற்பித்தும் ஒன்றை அழிக்குங்குணம் தாமத குணத்தின் இயல்பாதலால் சங்காரத் தொழிலினைக்கொண்ட உருத்திரனுக்கு அக்குணத்தினைக் கற்பித்தும் நமது புராணங்களுகூறியிருப்பதானது மிகவும் பொருத்தமானதே. ஆகவே படைத்துக் காத்து அழிந்துவரும் சக்திகளே பிரமா விஷ்ணு உருத்திரன் என உண்மைநூல்களிற் கூறப்பட்டிருப்பவைகளாம். இம்மூன்று சக்திகளும் வெவ்வேறு சக்திகளோ எனின்; அன்று. மற்று யாதோ எனின் ஒரே சக்தியின் மூன்று விதமான நிலைகள் என்று உணர்க.

இதனை ஒரு சிறு உதாரணமுகத்தால் விளக்குவாம். இராமன் என்னும் பெயருடையான் ஒருவன் நியாயவாதியாயும், போதகாசிரியனாயும், உபாத்தியாசுகனாயும் இருக்கின்றானென்று வைத்துக்கொள்வோம். அவன் வீட்டிலிருக்கும்போது அவனை இராமனென்று எல்லோரும் அழைக்கின்றார்கள். நியாயத்தலத்திலிருக்கும்போது நியாயவாதி என்று அங்குள்ளார் கூறுகின்றார்கள். அவன் கல்வி பயிற்றும்போது போதகாசிரியர் என்று மாணுக்கர்கள் அவனை அழைக்கின்றார்கள். நிறைந்த சபையில்நின்று பேசும்போது பிரசாரகர் என்று பொதுசனங்கள் சொல்லுகிறார்கள் அங்ஙனம் ஒரே மனிதன் அவன் செய்யும் தொழிலுக்கு ஏற்ப அவ்வச் சமையங்களில் ஒவ்வொரு பெயரால் அழைக்கப்படினும் உண்மையில் உள்ளமனிதன் ஒருவனே.—அப்பெயரெல்லாம் அவனையே குறிக்கின்றன. அந்தேபோல் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய பரமபதியொருவனே சிருட்டித்தொழில் செய்யும்போது பிரமா என்றும் காத்தற்றொழில் செய்யும்போது விஷ்ணு என்றும், சங்காரத்தொழில் செய்யும்போது உருத்திரன் என்றும் அழைக்கப்படுகின்றார். இவ்வுலகசம்பந்தமான அறிவோடு கூடிய சக்தியைத்தான் நாம் பலபெயரிட்டு வழங்குகின்றோம். இதனை இன்னோருவிதவழியாலும் காணலாம். காற்றும் அலையும் இல்லாதபோது ஓர் நீர் நிறைந்த குளத்தில் ஒரு சிறுகல்லை நாம் எறிந்தால் அந்நீர்மத்தியில்சிறுபள்ளந்தோன்றி அதைச் சுற்றிலும் உடனே வட்டவடிவமான நீரலைகள் நடுவிலிருந்து வெளியிற்பரவியோடுவதைக் காணலாம். அவ்வட்ட அலைகள் கொஞ்சநேரம் சென்றபின் உள்ளே குவிந்தடங்குவதையுங் காணலாம். இதனால் வெளியில் விரியுஞ் சக்தி, உள்ளே யொடுங்குஞ் சக்தி, இவ்விரண்டு சக்திகளுக்கும் காரணமான மர்மிய சக்தியெனும் மூன்றுவிதசக்திகளைக்காணலாம். இம்மூன்று சக்திகளும் குறிப்பான கோட்பாடுடன் கண்மபரிபாக நியதியின்படி உலகங்களையும் படைத்துக்காத்து அழிக்கின்றனவென்பது தத்துவசாத்திரத்தின்கொள்கையாகும்.

மத்தியிலிருந்து வெளியே பரவச்செய்யும் சக்தியே பிரமாவெனப்படும். சிருட்டியையும் சங்காரத்தையும் மீறவிடாமற்காப்பதாகிய சக்தியே மத்தியசக்தியென் றழைக்கப்படும் விஷ்ணுவாகும். ஒடுங்கும்படிசெய்யும் சக்தியே உருத்திரனாகும். மத்தியசக்தியின்றேல் படைப்பில்லை. படைப்புச் சக்தியின்றேல் சங்காரமில்லை. சங்காரசக்தியின்றேல், காக்குஞ்சக்தியில்லை. இவ்வாறாக வொன்றையொன்றுதொடர்ந்தேநிற்பதால் மூன்றுமூர்த்தியும் தவித்தனியே முக்கியராம். தோற்றுவிப்பாவில்லையேல் காப்பது வேண்டாவாம். காப்பாவில்லையேல் அழிப்பது வேண்டாவாம். தோற்றி ஒடுக்கங்களைக் காப்பதும் தோற்றியபொருளைக்காப்பதுமே திதியாகும். இவ்வாறான மேலான தத்துவப் பொருளினைக்கொண்ட மும்மூர்த்தியின் உண்மைப்பொருளின் ஒருபுறம் வைத்து இவைகளில் உயர்வு தாழ்வு கற்பித்தும் பதி இலக்கணத்தை ஒன்றினுக்கேற்றியும் வாதாடும்குதர்க்கிகளும் உண்டு. மூர்த்தியுபாசனையில் முதன்முதலில் புகுவார்க்குப் பத்திநெறிப் பழக்கம் திடப்பட முன்னோர்கள் இம்மூர்த்திகளினொரிடத்துயர்த்தியும் ஒரிடத்துத் தாழ்த்தியும் நூல்களில் கூறியுள்ளார்கள். பத்திவழிநிடப்பதின், சமரசம் தானாகவே உதிக்குமென்பது அவர்கள் உட்கருத்து திருக்குறுங்குடி, சிதம்பரம், திருவரங்கம், மதுரை, அழகர்கோயில் இத்தலங்களின் மூர்த்திகளின் வழிபாடு திருவிழா முதலிய நயங்களைப்பருகுதலினாலார்க்கு நாமிங்கு எடுத்துக்காட்டியது இனிதுவிளங்கும்.

கெ. வை. செல்லையா.
வண்ணைநகர்.

உங்கள் குழந்தைகளுக்கு

லக்ரொஜின்

என்னும்

இயற்கையான பாலுணவை ஊட்டி

நன்மையடையுங்கள்.

இந்தப் பாலுணவே

முலைப்பாலுக்குச் சமானமானது.

இது

தசையையும் என்புகளையும் விருத்தி செய்யும்

சக்திவாய்ந்தது.

இந்த உணவை உண்டு வளர்ந்த குழந்தைகள்

இறுக்கமான தசைநார்களும்

அரோகதிடகாத்திரமு முடையவர்களாய்

இருக்கிறார்கள்.

லக்ரொஜின்

சவலைகளைப் பராக்கிரம முடையவராக்கும்.

இந்த உணவை

இலங்கையிலுள்ள ஔஷதசாலைகளிலும்

கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி இடங்களில் கிடைக்காவிடில்

நேரே எங்களுக்கு எழுதுங்கள்.

மாதிரி லக்ரோஜின் உணவும் அதின் விபரங்களடங்கிய புத்தகமும்

உடனே அனுப்பப்படும்.

நெஸ்லின் & அங்கிளோ சுவிஸ்
கொன்டென்ஸ்ட் மில்க் கோ.,
தபாற்பெட்டி, 189,
கொழும்பு.

பிறீ கூப்பன்.
H. O.
(Q. 49.)

தயவுசெய்து உங்கள் அரிய புத்தகத்தில் (Baby Book) ஒன்றும், மாதிரி லக்ரொஜின் உணவும் கிரயமின்றி அனுப்பவும்.

பெயர்:— .....

விலாசம்:— .....

செந்தமிழ்த்தாயும் நம்மனோரும்.

உலகிற்பலவகுப்பினரேற்பட்டதாற் பாஷைகளும் பலவாயின. அவ்வவ்வகுப்பாருக்கு அவ்வப்பாஷையே பெரிதும் வேண்டப்படுவது எனினும் இராசாங்கம்எப்பாஷையைஅனுசரிக்கின்றதோ அதனையே மற்றையோரும் விரும்பிக் கற்பர். என்றாலும் தமக்குரிய சுயபாஷையை ஒருவரும் வெறுக்கத் துணியார். இராசபாஷையிலும் பார்க்கத் தம் சுயபாஷையிலேயே யாவரும் அபிமானம் பெரிதும் வைப்பர். தற்காலம் நம் சகோதரர்களாகும் தமிழ்ப்பாலியர்கள் அநேகருக்குத் தீஞ்சுவை பயக்கும் செய்யச் செந்தமிழ்ப்பாஷை வேப்பங்கனியாய் மாறிவிட்டது. ஆங்கிலபாஷை யென்றாலோ தேவாமிர்தமாய்விட்டது. காரணம் இளம்பராயந் தொடங்கி ஆங்கிலபாடையிற் பயின்றுவந்தமையே! உத்தியோகம் பெறும் நோக்கங் கொண்டு ஆங்கில கற்றதேயன்றி வேறு இகபரசுகங்களுக்கான வழிவகைகளுக்கல்ல வென்பதைச் சிறிதுன்றியுணர்கின்றார்களில்லை. இகபரசுகங்களுக்கு இன்றியமையாத சாதனமாய், சுவைதொறுஞ் சுவைதொறுந் தெவிட்டாப் பேரின்பசுகத்தை வரையாது தரவல்லதாய் ஆய்தோறும் பெருகுவதாய், தனக்கொப்புவமை இல்லாததாயுள்ள செந்தமிழை அநேகர் கைவிரித்து விட்டிருக்கின்றனர். தற்கால நாகரீகப் பிசாசினாற் பீடிக்கப்பெற்ற சில ஆங்கிலங்கற்ற தமிழ் உத்தியோகஸ்தர், தங்களது ஆங்கிலங் கல்லாத இனபந்துக்களையும் ஆங்கிலத்திற் பேசும்படி பழக்குகின்றனர். அத்துடன் அவர்கள் முன்பாகத் தாய்மொழியாகுந் தமிழையும் அவமதிக்கின்றனர். ஃபிகெகிதர் முதலியோருடன் வார்த்தையாடநேருங்கால் முதல் தமிழிற் பேசி, பின்பு அரைகுறையாய் ஆங்கிலத்திற் பேசி, ஈற்றில் முழுதும் ஆங்கிலமாகவே பேசுகின்றார்கள். இவர்களின் அபிப்பிராயம் என்னவென்றால், தற்போதையநாகரீகத்தின்படி ஆங்கிலத்திற் றங்களோடொத்த தமிழர்களோடு பேசுதல் மகா கௌரவமென் றெண்ணுகின்றார்கள்போலும். ஆங்கிலங் கல்லாத வேறு பிறருடன் பேசும்போதுகூடத் தமிழ்மொழியோடு இரண்டொரு ஆங்கிலச் சொற்களையுங் கலந்து பேசுகின்றனர். ஆங்கிலப்படிப்பிலும் ஆங்கிலபுதினப் பத்திரிகைகளிலும் இவர்கள் எடுக்கு மூக்கத்திற் சாற்பங்குதானும் தமிழ்ப்படிப்பிலுந் தமிழ்ப்பத்திரிகைகளிலாசிப்பதிலுமெடுக்கின்றார்களில்லை. இது ஒருபுற மிருக்க, இவ்வைக்கியமலாய்நாட்டிலுள்ள நந் தமிழ் நண்பர்களின் ஊக்கத்தினால் தமிழ் வளர்ச்சியின் முன்னேற்றத்தின் பொருட்டு அநேக சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அச் சங்கங்களில் நடைபெறும் கருமங்கள் யாவும் ஆங்கிலபாடையிலேயே பேசப்பட்டு முடிவடைகின்றன இவர்களின் சொர்தப் பாஷையாகிய தமிழிற்பேசாது ஆங்கிலத்திற்பேசுமிவர்களின் குறுகிய மதியை என்னென்று பேசுவது. கர்தோர்முதலியவிடங்களில் ஆங்கிலத்திற்பேசுவதமைவறும். மற்றைப்படிசத்காலக்ஷேபஞ்செய்யுஞ் சங்கங்களில் ஏனோ இங்கிலீஸ் துதங்களை உளறி வழிகிறார்கள். தாய்மொழியாகிய தமிழைப் பேச இவர்கள் வெட்கமடைதல் அழுக்குத் துணிகளைச் சுமக்குங் கர்த்தபம் சிவலிங்கத்தைச் சுமக்கவெட்கமடைந்தவாறுகவன்றோ விருக்கின்றது. பெயரளவுக்கு மாத்திரம் தமிழர்சங்கமென்பதாக விருக்கின்றதேயன்றி மற்றைப்படிநிகழ்வனயாவும் ஆங்கிலமயமாய்த்தானிருக்கும். இவர்கள் தங்கள்சங்கங்களில் ஆங்கிலத்திற் சொற்பொழிவு செய்யுந்தருணம் பிறசாதியார் சென்று நீங்கள் தமிழ்மக்களாயிருந்தும் தமிழிற் பேசாது பிறபாடையாகிய ஆங்கிலத்திலேன் பேசுகின்றீர்கள் என்று கேட்டால் என்ன பதிலிறுப்பேன் வறியேம். அன்றியும் தமிழர்சங்கத்தில் தமிழிற் பேசவேண்டுவதன்றிப் புண்ணியமில்லாப் பாடையாகிய ஆங்கிலத்திற் பேசவேண்டிய அவசிய மில்லையே. இதை இம் மலாய்நாட்டிலுள்ள தமிழ் நண்பர்கள் சிந்தியாதிருப்பது ஏனோ தெரியவில்லை. ஒருதலையாக தங்கள் உத்தியோகத்தின் அந்தஸ்துகளுக் தங்கள் நடப்புக்கும் தமிழிற் பேசுதல் அவ்வளவு சிலாக்கியமல்லவென் றெண்ணுகிறார்களாகும். இவர்களின் அறியாமைக்கு என்செய்வது. தம்சொந்தப்பாஷையாகிய தமிழைப் பேச வெட்கப்படு மிவர்கள் தாமா சைவசமயத்தை முன்னேற்றமடையச் செய்வார்கள்? இவர்கள்தாமா தமிழ்ச்சங்கங்களை வைத்து நடத்துபவர்கள்? இவர்கள்தாமா தமிழ்மாதின் புதல்வர்கள்? இவர்கள்தாமா தமிழ்த் தெய்வமாகும் சரஸ்வதிதேவிக் குகந்த தொண்டர்கள்? நமது! நன்று!! இவர்களின் மௌட்டீகத் தன்மை.

அறிவு விகிதமாகாதபடியாலும் நவநாகரீகமாகும் மிலேச்சநாகரீகத்தி லழுந்தியிருந்தமையாலும், ஆரம்பத்திலேயே தமிழறிவை வளர்க்காது ஆங்கிலபாடையிற் புகுந்தமையாலும், புகுந்ததோடமையாது இந்துனைக்காலமும் தமிழிற் சிரத்தையெடுக்காது ஆங்கிலபாடைக்காகப் பிறந்தவர்களைப்போல உழன்று வந்தமையாலுமே தமிழின் றோம் பெருமையுஞ் குறைவுற்றன. இனிமேலாவது, இலங்காதேவியின் சிரோரவனியாக விளங்கும் யாழ்ப்பாணத்தினுற்பவித்து இவ்வைக்கியமலாய்நாட்டில் உத்தியோகத் தலர்ந்திருக்கும் நமது நண்பர்கள் யாவரும், உத்தியோகம் பார்க்கும் நேரம் நீங்கலாக மற்றையவைகாலங்களில் செவ்வத்தமிழைக் கையாண்டுவருவார்களேயானால் தெய்வமணம் விரவப்பெற்று நற்கதிக்குள்ளாவார்க ளென்பதில் ஐயமின்றாம்.

இங்ஙனம்,
புதலியர்சோன்,
சிங்கப்பூர்.

சுகாதாரம்.

(தண்ணீர்)

நாம் ஜீவிப்பதற்கு, காற்று உபயோகமாயிருப்பது போலத் தண்ணீரும் இன்றியமையாததாய் இருக்கின்றது. எங்கள் தேஹமே நூற்றிற்கு 70 பாகமும் தண்ணீர் சேர்ந்ததாயிருக்கின்றது. உணவைச் சமைப்பதற்கும், குடிப்பதற்கும், குளிப்பதற்கும், இன்னோரன்ன பிறவற்றிற்கும் தண்ணீர் இன்றியமையாததாயிருக்கின்றது.

இப்படியெல்லாம் தண்ணீர் எங்களுக்கு அத்தியாவசியகமாயிருப்பவும் நாம் நல்ல சுத்தமான தண்ணீரைப் பெற்றுக் கொள்ளச் சிரத்தையெடுக்கின்றோமில்லை. இதனால் நாம் சன்னிவச்சுரம், (Typhoid Fever) வாந்திபேதி, வயிற்றுளைவு, குஸ்டம், சிரங்கு என்னும் தொற்றுநோய்களையும், இன்னோரன்னபிறவியாதிகளையும் பெற்றுக்கொள்வதற்கு ஆளாகின்றோம்.

தண்ணீரிலே, சுண்ணாம்பு, உப்புப்போன்ற லோகவகையான அழுக்குக்களும், இலை, புல், பூண்டு, பாசி முதலான தாவர அழுக்குக்களும் பலவகையான ஜீவனுக்களுமுண்டு. இவற்றுள் ஜீவனுக்களே மனிதருக்கு அதிக கெடுதியானவைகள், ஏனெனில்: சன்னிவச்சுரம், வாந்திபேதி, வயிற்றுளைவு என்னும் நோய்களைக்கொண்டுவரும் ஜீவனுக்கள் தண்ணீர் மூலமாகவே பொதுவாய் மனிதனைப் பீடிப்பவை. பொதுவாய்க் கிணறு, கேணித்தண்ணீர்தான் அதிக அழுக்குடையன. இவை அழுக்கான இடத்திலிருந்து ஊற்றெடுப்பதால், அல்லது நாம் அழுக்காக்குவதினால் அழுக்காகின்றன. கிணறு கேணிக்கருகாமையில் நாம் ஒரு பிரேதத்தைப் புதைப்போமாயின் அல்லது மலசலமோசனம் செய்வோமாயின், அல்லது அழுக்குக்களைக் கழித்து விடுவோமாயின் மழை பெய்யும்பொழுது இப்பூமிக்குள்ளே நுளைந்து செல்லும் மழைத்தண்ணீரானது, இப்பூமிக்குள் இருக்கும் பிரேத அழுக்குக்களையும், மேலிருந்த மல, சல அழுக்குக்களையும் கழுவிக்கொண்டு ஓர் ஊற்றிலே போய் விழுகின்றது. இவ்வூற்று பக்கத்திலேயுள்ள கேணி, கிணற்றிலே போய் விழுகின்றது. இப்படி அசுத்தமாக்கப்பட்ட தண்ணீரை உபயோகிப்பதால் மேலே சொல்லப்பட்ட ஜீவமோசமான நோய்கள் ஏற்படும். ஆகையால் கேணி கிணறுகளின் அருகாமையையும், அருகாமையிலுள்ள பூமியையும் நல்ல புனிதமாய்வைத்திருத்தல் வேண்டும்.

குடிப்பதற்கும், சமைப்பதற்கென்றுமுள்ள கிணற்றுத்தண்ணீர், கிணற்றிலே நின்று ஸ்நானம் செய்வதினாலும், கிணற்றுப்படியிலே தண்ணீர்க்குடங்களை வைத்துக் கழுவி அள்ளுவதினாலும், கிணற்றுப்படியிலே கால்வைத்து நின்று அள்ளுவதினாலும், உயிருள்ள செந்துக்கள் வீழ்ந்திறப்பதினாலும், பக்கத்திலேயுள்ள மரம் செடிகளின் இலைகள் வீழ்ந்தழுகுவதினாலேயும் அசுத்தமாகின்றது. ஆகையால் கிணறுகளை மூன்று மாசத்திற் கொருமுறையேனும் இறைத்துச் சுத்தப்படுத்துதல்வேண்டும். இத்துடன், கிணற்றுப்படிகள் நிலமட்டத்தோடிருத்தல் சுகாதாரத்திற்கு மாறுனவை மாத்திரமல்ல, ஜீவமோசமானவைகளாயுமிருப்பதால், இவைகளை நிலமட்டத்திலிருந்து நாலடிக்குக் குறையாது உயர அமைத்தல்வேண்டும்.

மேலே சொல்லப்பட்ட மாதிரியாகக் கிணறுகளைச் சுத்தமாய் வைத்திருப்பவர்கள் மிக அரிது. ஆகையால், குடிக்கும் தண்ணீரை அவித்து ஆறியபின், வெள்ளைத்துணியில் வடிகட்டிக் குடித்தல்வேண்டும். வடிகல்லிலே வடிகட்டிக்குடித்தல் இன்னும் அதிக உத்தமம்.

தண்ணீரைக்காய்ச்சுவதினால் எவ்வகையான ஜீவனுக்களும் இறந்துபோகின்றன; வடிகட்டுவதினால் மற்றைய தாவர அழுக்குக்களுமில்லாமற்போகின்றன.

குடிக்கும் தண்ணீரைப்போலவே குளிக்கும் கேணி குளங்களின் தண்ணீரையும் புனிதமாய் வைத்திருத்தல்வேண்டும். அழுக்கான சலத்தில் ஸ்நானம் செய்வதால் சிரங்கு, சொறியு போன்ற சருமவியாதிகளைப் பெற்றுக் கொள்ளுகின்றோம். இவற்றையெல்லாம் நம்முன்னோர் உணர்ந்து ஒராமத்திற்குக் ஒராமம் தேவையான கேணி குளங்களை அமைத்து, அவற்றைக் காலத்திற்குக்காலம் இறைத்துச் சுத்தி செய்தும்; அழிந்தவற்றைப் புதுப்பித்தும்; இடிந்தவற்றைத் திருத்தியும்; அவற்றிற்குப் பக்கங்களில் சோலைகளை அமைத்தும் வந்தார்கள். இப்படியவர்கள் புனிதமாயும் வனப்பாயும் வைத்திருந்தது மாத்திரமல்ல, பரிசுத்தமாயும் வைத்திருந்தார்கள். நாம் அவர்களின் சுகாதார பரிசுத்த ஆசாரங்களைக்கைநழுவவிட்டு மாத்திரமல்ல அவர்களால் எங்களுக்குப்பரிசளிக்கப்பட்ட நீர்நிலையங்களையும் மிக்க மனம் தாபப்படக்கூடிய நிலையில் விட்டுவிட்டோம். யாழ்ப்பாணம் முப்பத்திரண்டு கோவிற்பற்றிலும் கேணி குளங்கள் இப்படிக் கேவலமான நிலையிலே விடப்பட்டிருக்கின்றன. இவற்றைச் செவ்வனே வைத்திருப்பதற்கும் சுயராச்சியம் வேண்டுமோ? இதுவிஷயத்தை விரிக்கின் பெருகும்; எடுத்தவிஷயமும் பிளவுபட்டுப் போகுமாதலால் விடுத்தாம், (வரும்).

S. M.
பகான்.

இனும்! இனும்!! இனும்!!!

இதனடியில் கண்ட மருந்து வாங்குகிறவர்களுக்கு மட்டில்

வைத்திய சாஸ்திரத்தில் அதிக அனுபவமுள்ள ஹக்கீம் K. முகம்மது யூசுப் அவர்களால் செய்யப்பட்ட (வைத்திய சாஸ்திர நீதிநூல்) 96 பக்கம் அடங்கிய புஸ்தகம் ஒன்று இம்மருந்துடன் இனாமாக அனுப்பப்படும். மானிட சரீரத்தில் பரவும் பல நோய்கள் வீரியபலஹீனங்கள் நாரம்புத் தளர்ச்சிகள் வீரிய கஸ்டத்தின் விபரங்கள் அது ஜனித்த காரணங்களையும் அதன் லக்ஷணங் குறிகளையும் அதற்கு மருந்தும் பரிகாரமும் சரீரத்தில் உள்ள சில ரகசியமான விஷயங்களையும் வைத்தியரிடம் வெளிப்படுத்தாமல் தனக்குத் தானே அறிந்துகொள்ளக்கூடிய அருமையானதோர் சாஸ்திரமாயிருக்கின்றது.

அவுஷதங்களில் அருமையான வித்தை.

ஜெகப்பிரசித்தி பெற்ற

சிட்டுக்குருவி அமிர்த லேகியம்.

பலமில்லாமல் தளர்ந்து சோர்வடைந்த நரம்புகளையும் உலக வாழ்க்கையில் பிரியமில்லாமல் சஞ்சலப்படும் மனதையும் ஒருவேளை லேகியம் சாப்பிட்ட பிறகு ஆச்சரியப்படும்படி நரம்புகளுக்குப் பலமும் நிமிர்வும் உண்டாக்கும்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதமுள்ள உண்மை அவுஷதம்
குணமில்லையென்று சூபிக்கிறவர்களுக்கு பணத்தைத் திருப்பிக் கோடுக்கப்படும்.

வீரியபுஷ்டியையும் மன உற்சாகத்தையும் கொடுப்பதில் இதற்குச் சமமாய் எதைக் காட்டமுடியும். இதனை அனுபவித்தவர்கள் இப்பெருமை தங்கிய மருந்திற்கு உள்ள அபூர்வசக்தியைப் போலே இவ்வுலகத்தில் வேறு எந்த மருந்திற்கும் இல்லையென்று அனேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எழுதியிருக்கிறார்கள்.

அன்பனே! இதுவரையிலும் வீரியதத்துவத்திற்காகவும் நாடி நரம்புகளின் உற்சாகத்திற்காகவும் மூளையைப் பலப்படுத்தி ஞாபகசத்தியை விர்த்திசெய்யவும் தேகசாங்கையினால் நீற்றுப்போகும் பலஹீனம் பற்பல வாய்வுரோகம் இடுப்பவலி கைகாலசதி மலச்சிக்கல் பசிமந்தம் இவைகளுக்கெல்லாம் எத்தனையோ விதமான அவுஷதங்கள் சாப்பிட்டிருப்பீர்கள். அவைகளுக்கெல்லாம் இது முதல்தரமான மருந்தென்று தங்களின் சினேகிதர்பால் புகழ்ந்து பேசுவீர்கள். பத்தியமில்லை.

முக்கிய கவனிப்பு:—சில போலி சிட்டுக்குருவி லேகியங்கள் ஆயிரக்கணக்கான ரூபாய் இனாமென்று சபதங்கள் கூறிக்கொண்டு பல விளம்பரங்கள் வெளிவந்துகொண்டிருக்கிறபடியால் எமது விலாசத்தைக் கவனித்து ஆடர் செய்யவேணும்.

40 நாள்	80 வேளை	டப்பி 1க்கு	விலை ரூபா	10—0—0
20 ,,	40 ,,	,,	,,	5—0—0
10 ,,	20 ,,	,,	,,	2—8—0.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

இந்தியா, பர்மா, சிலோன் இம்மூன்று தேசங்களுக்கும் வி. பி. யில் மருந்து அனுப்புவோம். பினாங்கு, சிங்கப்பூர், மற்ற மலாய் தேச வாசிகள் மருந்தின் கிரயமும், பார்சல் சிலவு ரூபா 2ம் சேர்த்து முன்பணம் அனுப்பினால் மட்டில் மருந்து அனுப்பப்படும்.

விலாசம்.

ஹக்கீம் கா. முகம்மது யூசுபு,
முகம்மதியா வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, (தென்னாற்காடு ஜில்லா)
(H. 27.)

Hakeem K. Mohamed Yoosoof,
Mohamedia Medical Hall,
Porto-Novo, S. A. Dt.(INDIA.)

4 மாசத்தில் 200 குஷ்டரோகிகள் சொஸ்தமடைந்து விட்டார்கள்!
திமிர், குஷ்டம், தீர்ந்து விட்டன!
மதமதப்புமாரி சொரணையுண்டாகி விட்டன.
தடிப்புகள் மாறிவிட்டன, பத்துகள் மறைந்து விட்டன,
சொரிகள் உதிர்ந்து விட்டன, அரிப்புகள் மாறிவிட்டன,
ரணங்கள் ஆறிவிட்டன,
குன்மம், கிரந்தி, மேகமெல்லாம், தீர்ந்து, விட்டதென்று தினம்
நற்சாக்ஷிகள் வந்தவண்ணமாயிருக்கின்றன.
ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.
அநேக நற்சாட்சிகளும் தங்கமெடலும் பரிசு பெற்று
உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

25-8-1923-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் மருந்து வைத்திய கண் காட்சியில் இவர் மருந்துகள் பஸ்ட் கிளாஸ் தேவ ஔஷதங்களென்று தங்கமெடலும் வைத்திய ஆசிரியர் என்று பட்டமும் பெற்றவர்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். உத்தரவாத முள்ளது. குணம் இல்லை என்பவர்களுக்கு பணம் திரும்பக்கொடுக்கப்படும். வைத்திய சாஸ்திரத்தில் மகா நிபுணர்: முப்புவைக் கண்டுபிடித்தவர்.

தாம்பர பஸ்பம்.

சகல வியாதிக்கும் கைகண்டது.
முப்புவினால் தனுக்கற நீற்றியது. களிம்பற்றது.
வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது பத்தியமில்லை.
வியாதிகளை விபரமாய் எழுதவும்.
உங்கள் வியாதிகளை மறுமுறை திரும்பிவராமல் நிவர்த்திக்கும் வல்லமை யுடையது.

20-வருஷ காலமாய் அனேக வியாதிகளுக்குக்கொடுத்து அனுபவமுள்ளது. இந்த மருந்தினால் தீராத வியாதிகள் கிடையாது. சகல வியாதிகளுக்கும் இந்த ஒரே மருந்து போதும்! ஒருமருந்துக்கும் வசப்படாத வியாதிகளெல்லாம் இந்த மருந்தில் தீருவது வெகு ஆச்சரியமாக இருக்கிறது. திடீரென்று சம்பவிக்கக் கூடிய ஆபத்தான சகல வியாதிகளையும் யாவரும் பிரமிக்கும்படி வெகுசீக்கிரத்தில் நிவர்த்திக்கும். சீக்கிரத்தில் குணப்படுத்துகிறதை பார்க்கும்போது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. ஜுரம் 64-ஜன்னி 13-தோஷம் 7-ம் ஜாஸ்தியாகி எந்த மருந்திலும் தீராத சமயம் உட் கொண்டால் அந்த க்ஷணமே நிறுத்தும் 3-நாள் மருந்தே போதும். வெகு சீக்கிரம் பிரமிக்கும்படி வாய்வு 300-ம் இதில் அவசியம் தீரும்; வைத்தியர் தேவையில்லை. மேக நீரினால் பொறுக்கமுடியாத கைகால் குடச்சலை உடனே நிறுத்தும். குறைநோய் சம்பந்தமான ஆராதமணங்களும், விரல்கள் அழுகிப்போயிருந்தாலுஞ்சரி அந்தமட்டில் புண்கள் ஆறிவிடும். பின் புண்ணாகாது. எந்த மருந்திலுந் தீராத எவ்வளவு நாள்பட்ட கிரந்தி, புண் புரைகளும் இதில் அவசியந் தீரும்; வெட்டை, முத்திமொழிகளில் சூலை, வீக்கம், வலி, கை கால் குடைச்சல் கிரந்தி, நரைச்சல், மேகஊசல், பத்து, அரிகிரந்தி, தடிப்பாய் நரம்பு பிடித்து கை காலை முடக்கிவிடும் மேக வியாதிகளும் இதில் அவசியம் தீரும். ஜுரம், 64 ஜன்னி, 13 தோஷம், 7 வாயு, 26 மேகம், 21 குஷ்டம், 18 சூலை, 18 கிரந்தி, 6திமிர், 10 குன்மம், 8 இருமல், 8 க்ஷயம், 6 காசம், 8 மூலம், 9 பவுக்கிரம், அரையாப், 8 கண்டமாலை, 9 தீராணி, 6 விஷநீர், 4 வீக்கல், 8 வெடிப்பு ரணம், வெள்ளை, வெட்டை, கந்திமேகம், எரிச்சல், கடுப்பு, நீரடைப்பு, கல் அடைப்பு, ஆறாதபுண், புரை, குழிபுண், புற்றுக்கட்டி, பிளவை, கரக்கை வலிப்புகள், பக்கவாதம், நடுக்குவாதம், மயிமதப்பு, சூதகவாய்வு, வயிற்றுவலி முதலியசகலவித கர்ம வியாதிகளும் கண்டிப்பாய் தீரும். அனுபவத்தில் கை கண்ட அருமையான மருந்து. 80 வேளை ரூபா 40; 40 வேளை ரூபா 20; 20 வேளை ரூபா 10; ஏழைகட்கு பாதி விலை.

வைத்திய ஆசிரியர்.
R. M. K. வேலுசாமிபிள்ளை,
சித்த ஆயுள்வேத வைத்யசாலை, பழனி.
(Y. 31.)

வான்முகில் வழாது பெய்கமலிவளங் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாஅயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.